1986 மே 9]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அவரவர்கள் விரும்பியபடி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதற்கு பரிசீலனை என்று பெயராக இருக்க முடியாது.

(ஆ) விருதுநகர் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் உள்ள மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டுள்ளது குறித்து

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''அண்மையில் காமராசர் மாவட்டம், விருதுநகர் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையில் இரு பக்கமும் உள்ள சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள முதிர்ந்த பச்சை புளிய மரங்களைச் சமூக விரோதிகள் வெட்டி விட்டனர். அவற்றை அதிகாரிகள் பட்டுப்போன மரங்கள் என்று குறைந்த தொகைக்கு, வெட்டியவர்களுக்கே ஏலம் விட்டதினால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புப் பிரேரணையில் குறிப்பிடப்படும் அருப்புக்கோட்டை—விருதுநகர் சாலை கி.மீ. 0-0-17/8-ல் உள்ள மொத்த மரங்களின் எண்ணிக்கை 952 ஆகும். இதில் கடந்த ஜூலை 1983 முதல் ஏப்ரல் 1986 வரை உள்ள காலத்தில் களவு போனவை முழு மரங்கள் இரண்டும் மற்றும் முறிந்த கிளைகள் 11ம் ஆகும். இதே கால அளவில் பட்டுப் போன மற்றும் காற்றினால் விழுந்த மொத்த மரங்களின் எண்ணிக்கை 225. இம்மரங்கள் அவ்வப்போது விரிவான விளம்பரங்களுக்குப் பின் பகிரங்க ஏலத்தில் விடப் பட்டன. இதன் மூலம் கிடைத்த மொத்த தொகை ரூ. 18,147 ஆகும். மீதமுள்ள மரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காவல் துறையினருக்குப் புகார் செய்யப்பட்ட திருட்டுகளின் மொத்த எண்ணிக்கை ஆறு. கண்டு பிடிக்கப்பட்ட ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நபருக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. மூன்று வழக்கில் காவல் துறை இன்னும் நமக்கு பதில் தரவில்லை. அவைகள் புலனாய்வில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிடையாகப் பார்த்து, அது சம்பந்தமான புகைப் படத்தினையும் இங்கே என்னிடத்தில் தந்திருக்கிறார்கள். அந்த நிலைமைகளுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர்-அருப்புக்கோட்டை சாலை பசும் சோலையாக இருந்தது. இப்போது அது பாலைவனமாக காட்சியளிக்கிறது. இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள பச்சை மரங்கள் வெட்டப் பட்டுள்ளன. ஆனால் 18 ஆயிரம் ரூபாய்க்கு தான் அவை ஏலம் விடப்பட்டுள்ளன. மீதி போலீஸ் கேசில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்

னார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் அனுமதியோடு இந்தப் புகைப்படங்களை அமைச்சர் அவர்களிடம் காண்பிக்கிறேன். நேரிடையாக அவர்கள் வரட்டும், நானும் வருகிறேன். இல்லாவிட்டால் சட்டமன்ற குழு போடுங்கள். நேரிடையாகப் போய் பார்ப்போம். சம்பந்தப்பட்ட தவறான குறிப்பைக் கொடுத்த அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் எஸ்.இ. ஆக இருந்தவர் சீ.இ. ஆக வந்திருக்கிறார். அந்தப் பகுதியில் டி.இ. ஆக இருந்தவர் மூன்று நான்கு வருடங்களாக இருக்கிறார். இந்தக் குற்றங்களை எல்லாம் செய்ய வேண்டும் இல்லையா, அதற்காக தான் இருக்கிறார். ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத்தலைவர் அவர்களே, இந்தப் புகைப்படங்களை எல்லாம் கொண்டு வந்து கொடுத்ததற்கு நன்றி. கொஞ்சம் காலத்திற்கு முன்னாலேயே கொடுத்திருந்தால் கூட நடவடிக்கை எடுத்திருக்க முடியும். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து தான் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக் கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உறுப்பினர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கொஞ்சம் முன்கூட்டியே கொடுத்து விட்டால் உடனடியாக நடவடிக்கை எடுத்துவிடலாம். இப்போது நான் சொன்னதைக் கூட என்னிடத்தில் கொடுக்கப்பட்ட குறிப்பை வைத்து தான் சொன்னேனே தவிர நேரிடையாக போய் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தப் புகை படங்களை வைத்து நேரிடையாகப் போய் பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைக்குமானால் போய் பார்த்து, தவறாக குறிப்பு கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது சரியாக பராமரிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தாலோ, தயவு தாட்சண்யம் இல்லாமல், அரசினுடைய நன்மையையும், பொது மக்களுடைய நன்மையையும் கருதி நிச்சயமாக அவர்கள் மீது இந்தத் துறை நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இராணி மங்கம்மாள் காலத்திற்கு பிறகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் தான், அதுவும் மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வி. அவர்கள் முயற்சியால் நம் நாட்டு வளத்தைப் பெருக்குகிறார்கள் சாலை ஓரங்களில் மரங்களைப் பெருக்குகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அரசுக்கு களங்கம் ஏற்படுத்துகிற வகையில் இந்தக் காரியம் நடந்திருக்கிறது. இந்த சமூக விரோத செயலை செய்வதற்கு, காமராசர் மாவட்டம் முழுவதிலும் இருக்கிற சாலையோர மரங்களை அழிப்பதற்கு சமூக விரோதிகள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். ஒரு கண்காணிப்புக் குழு போட்டு, மொபைல் வேன் போலீசோடு, துப்பாக்கியோடு போகவேண்டும். சும்மா போகக் கூடாது. அந்தமாதிரியாக நடவடிக்கை யெடுத்து இந்த மரங்களை காப்பாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமாகவோ அல்லது தனியார்களுக்குச் சொந்தமாகவோ இருப்பது எதுவுமே திருட்டு போகக் கூடாது என்பது தான் எல்லோரும் விரும்பக் கூடிய ஒன்று. எனவே திருட்டுப் போவதைத் தடுப்பதற்குத்தான் காவல் துறை இருக்கிறது. திருட்டு போவதைப் பற்றி எந்தத் தகவல் கொடுத்தாலும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஏற்கெனவே இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு நிச்சயமாக அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம். என்னென்ன குறைபாடுகள் நடந்திருக்கின்றன. எப்படி இன்னும் தீவிரமாக பராமரிக்க வேண்டுமென்பதைப் பற்றி தனியாக இந்தத் துறை மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன எதிர்பார்க்கிறார்களோ அந்தவகையில் நடவடிக்கையெடுக்கப்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

*திரு. சு. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் பல்வேறு துறைகளின் திட்டங்கள் செயல்படுவதற்காக 3,400 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டினால் நிறைவேற்றப்படுகிற அத்தனை திட்டங்களும் சரியான முறையில் எதிர்பார்க்கும் வகையில் செயல்படுத்தப்படுமா என்பதில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசின் நிர்வாக இயந்திரம் திட்டங்களின் தன்மைக்கேற்ப செயல்படுவதாகத் தெரியவில்லை. அந்த நிலையை சரிபடுத்தவும், ஆங்காங்கு இருக்கும் கோளாறுகளை சீர்படுத்தவும் இந்த அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை அல்லது செய்வதாகவும் தெரியவில்லை. கல்விக்காக நம்முடைய மானியத்தில் 550 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம்.